<u>**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE,(FTC) ERANIEL**</u>

**DEPOSITION OF WITNESS**

<u>(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )</u>

<u>**C.C.No. 223/2010 P.W. 1/L.W.1**</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ராஜகுமார் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ.மாதவன் | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 03.04.2024.**

<u>**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**</u>

<u>**1, 2, 5 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். 3, 4 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்.**</u>

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வேலை எதுவும் பார்க்கவில்லை. இதற்கு முன்பு நான் டாஸ்மார்க் கடையில் பணிச்செய்து வந்தேன். குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை எனக்குத் தெரியும். 01.03.2010 ம் தேதி மாலை 04.00 மணி அளவில் எனது வீட்டிலிருந்து கிளம்பி எனது மகனுக்கு சைமன்காலணியில் ஒரு பிரச்சினை என்பதால் நான் கோடிமுனைக்கு மாலை 04.45 மணி அளவில் நான் சென்றேன்.

2. அப்போது சகாய மதன், ரெதீஸ், ரமேஷ், பிரபு, சுமன் ஆகியோர்கள் வந்து அதில் சகாய மதன் என்பவர் கட்டையால் எனது இடது கை கட்டை விரலில் அடித்தார். ரமேஷ் என்பவர் எனது மூக்கில் கையால் குத்தியதில் எனக்கு மூக்கிலிருந்து இரத்தம் வடிந்தது. அதன் பிறகு குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் அனைவரும் ஒன்றாக கூடி என்னை தூக்கி கடலில் கொண்டுபோய் தாழ்ப்பதற்காக சென்றார்கள்.

3. அப்போது அந்த ஊரிலுள்ள பெண்களும், ஆண்களும் கூடி சத்தம்போட்டு குற்றம் சுமத்தப்பட்ட நபர்களிடம் என்னை விடும்படி சத்தம் போட்டார்கள். அதற்குள் நான் நினைவு இழந்துவிட்டேன். அதன் பிறகு என்னை சிகிட்சைக்காக குளச்சல் ஜேம்ஸ் மருத்துவமனையில்

அனுமதித்திருந்தார்கள். அதன் பிறகு 12 நாட்களுக்கு பிறகு எனக்கு நினைவு வந்த பிறகு போலீசார் என்னிடம் வாக்குமூலம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனக்கு தற்போது இடது கை கட்டை விரலில் முறிவு மற்றும் இடது காலில் காயம் ஏற்பட்டதால் வேலை எதுவும் செய்யமுடியவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** :

குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.